திரு ஆர் பொன்னப்ப நாடார் : கண்ணொளி மங்குவதற்கு சத்துணவுக் குறைவு ஒரு காரணமாக இருக்கிறது என்றார்கள். சத்துணவுக் குறைவைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் தீட்டியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படியிருந்தால் அதன் விவரத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : கேர் நிறுவனத்தார் கொடுக்கிற உதவியுடன் 10 வயது, 5 வயது, 3 வயது உடைய குழந்தைகளுக்குச் சத்து உணவு வழங்கும் திட்டம் உள்ளது. அவர்களில் ஒரு பகுதி மாணவர் களுக்குத்தான் இந்த உணவு கிடைக்கிறது. அந்தச் சத்து உணவும் கூட

It is only to rectify the deficiency that is created in the natural diet of the children"

என்கிற முறையில் அவர்கள் உண்கிற இயற்கையான உணவில் உள்ள சத்துக் குறைவை கொஞ்சம் ஈடு செய்யக்கூடியதாக இருக்கிறதே தவிர இதுவே நிறைவான உணவு அல்ல. எத்தகைய சத்து உணவு தேவை என்பது பற்றிய பொது அறிவு பெரும்பாலானவர்களிடையே இல்லாத ஒரு குறைபாடும் இருக்கிறது. அதற்காகத்தான் மதுரை டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஆலோசனையில் குழந்தைகளுக்கு எத்தகைய சத்து உணவு வழங்கப்பட வேண்டும் என்கிற ஆலோசனையே மக்களுக்கு வழங்குவதற்காக பயிற்சி கொடுக்கிற ஒரு திட்டமும் ஏற்பட்டு இருக்கிறது. பொது மக்களும் எந்த அளவுக்கு இதில் நல்ல அறிவும், அனுபவமும் பெற்றுத் தெளிவு அடைகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் இந்தத் திட்டம் வெற்றிபெற முடியும்.

Specialists for taluk hospitals.

*** 87Q.— Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether steps have been taken for the appointment of eye specilists and E. N. T. specialists in the taluk Headquarters Hospitals in this State ?**

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இச்சிறப்புப் பிரிவுகளை மாவட்ட, வட்ட, வட்டமல்லாத மருத்துவ மனைகளில் மூன்று காலகட்டங்களில் திறக்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. முதலில் மாவட்ட மருத்துவமனைகளும் பிறகு வட்ட மருத்துவ மனைகளும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

1973 பிப்ரவரி 9]

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எப்பொழுது அமுல் செய்ய உத்தேசம் என்று கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது பொதுவான கேள்வி. எந்தத் திட்டமும் படிப்படியாகத்தான் அமுல் செய்யப்படும். இது பொதுவான பதில்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வட்ட மருத்துவ மனைகளில் கூட இப்பொழுது எக்ஸ்ரே பிரிவு இல்லாமல் இருக்கிறது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட்ஸ் பற்றியது ; காது, மூக்கு, தொண்டை பற்றியது. ஆனால், எக்ஸ்-ரே பிரிவு ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் இதேபோல் திட்டம் தீட்டி இருக்கிறது. வருகிற ஆண்டிலே கூட, 3, 4 வட்ட மருத்துவ மனைகளிலும் வேறு சில மருத்துவ மனைகளிலும் இப்பிரிவை ஏற்படுத்துவதற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளிலே மாவட்டம், வட்டம் என்ற முறையில் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை விட எந்த எந்தப் பகுதியிலே இந்த நோய்கள் அதிகமாக இருக்கின்றனவோ அந்த அந்தப் பகுதியிலே ஆராய்ந்து அந்தப் பகுதிகளுக்கு முதன்மை அளிப்பதற்கு ஆலோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த காது, மூக்கு, தொண்டைப் பகுதி (ஈ. என்.டி.) நோய் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து பரவி இருக்கிற ஒன்றாகும். இது எல்லா இடத்திலும் எதிர்பார்க்கக்கூடிய நோயேயாகும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, ஈ.என்.டி. ஸ்பெஷல் டாக்டர்களை நியமனம் செய்யும்போது கூடவே, சிகிச்சைக்குத் தேவையான நவீன கருவிகளையும், நல்ல மருந்துகளையும் மருத்துவ மனைகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரிவுகளை ஏற்படுத்துகிறபொழுதே அதற்குத் தேவையான கருவிகள், மருந்துகள் இவைகளையும் சேர்த்துக் கொடுப்பதன்மூலம்தான் திட்டம் நிறைவு பெறும். வெறும் டாக்டர்களை மட்டும் நியமிக்காமல், படிப்படியாக ஏற்பாடுகளைச் செய்து மாவட்ட மருத்துவ மனைகளிலே அதற்கான இடம் அமைத்து, கருவிகள் அமைத்து, டாக்டர்கள் இடம் பெறாத இடத்திலே இடம் பெறச் செய்து, அப்படி வரிசையாகவே செய்யப்படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி மக்களிடத்திலே பண்டங்களை விற்கிற சிறு வியாபாரிகள் அந்தப் பண்டங்களை விற்றவுடன் அந்தப்பண்டங்கள் பரிசோதனைக்கு வருகிற காரணத்தால், அவர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் எந்த இடத்திலே பண்டம் வாங்கினார்கள் என்று நிரூபித்துத் தீரவேண்டும். அப்பொழுதுதான் பெரிய வியாபாரிகளைக் கண்டுபிடிக்க முடியும். இவர்கள் விலை மலிவாக வாங்குவதற்காக கலப்படம் செய்த பொருள்களை வாங்கி இருப்பினும், அதை விற்றவர்களை அதிகாரிகள் போய் சோதிக்கின்ற நேரத்தில் நல்லவகையான பொருள்களை வைத்திருக்கிற இடத்தைக் காண்பிக்கிறார்கள். ஆகவே, இதைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு இந்தக் கோரிக்கையைப் பற்றி மேலும் ஏதேனும் செய்யவேண்டுமென்று நாங்கள் கோரி இருக்கிறோம். ஆனால் அவர்களால் சரியான முடிவு செய்ய முடியவில்லை. இதைப் போக்க, சிறு வியாபாரிகள் தங்களுக்குள் சங்கம் வைத்துக்கொண்டு கலப்படம் செய்யும் பெரு வணிகரின் பண்டங்களை வாங்கக் கூடாது என்று பகிஷ்கரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கமும் பொது மக்களும் ஒத்துழைக்க பல்வேறு வகையிலும் ஆதரவு தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சிறு வியாபாரிகள் சங்கம் அமைத்து அதைத் தவிர்க்க வேண்டும். அடுத்து, பொருள்களை வாங்குபவர்கள், கன்ஸ்யூமர் கவுன்சில், வாங்குவோர் சங்கம் அமைத்து எந்த எந்த வியாபாரிகளிடமிருந்து வாங்கக் கூடாது என்று அறிவித்து பகிஷ்கரிக்க வேண்டும். வாங்குவோர் சங்கம் மூலமாக பொது மக்கள் பொருள்களை வாங்கலாம். இப்படிப்பட்ட சங்கம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு நகரிலேயும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

* 66—வினா : திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலங்கையில் இருந்து 1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட இலங்கை பிரஜா உரிமையில்லாதவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களை குடியமர்த்த தமிழ்நாடு அரசு என்ன ஏற்பாடுகள் செய்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :

(அ) 1) 1970–71 .. .. 12,938 பேர்கள்.

(2) 1971–72 .. .. 29,396 பேர்கள்.